DR. H. V. HANDE : Tiruverkadu is an important place because daily from Madras some thousands of persons go there for dharsan. May I know from the Hon. Minister the exact date on which this work will commence and the probable date by which the work will be over What are the steps the Government going to take to expedite the work?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெண்டர் முடிவுசெய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. விரைவில் வேலை தொடங்கப்படும். கருமாரியம்மன் கோவிலுக்குப் போகிற இடத்தில் ஒரு காஸ்வே இருக்கிறது. அந்த காஸ்வேயை கட்டவேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அந்தக் காஸ்வேயைக் கட்டுவதால் கிராம மக்களுக்குப் பயன் கிடைக்காது என்று சொல்லி அந்தக் கிராம மக்களும், தொகுதி எம்.எல்.ஏ. யும் சொல்லியதற்குப் பிறகு வேறு ஒரு இடத்தில் போடப்பட்டு மீண்டும் அந்த காஸ்வேயை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற கோரிக்கை பெறப்பட்டது.

The existing causeway has been affected by recent rains.

The rough stone embankment on either side of the vented causeway has been washed off as the course of the river has been changed, and that therefore the following provisions will have to be made for repairing the causeway :—

(1) Apron will be provided on both upstream and downstream with retaining wall throughout line at waterway;

(2) Additional rows of R.C.C. hume pipes 3 feet diameter will be provided in washed out portions to enable free flow of water so that there cannot be any breach in future.

The retaining wall of the causeway will be extended on both sides for a length of 100 feet. The existing cement concrete pavements will be extended for the whole length of the causeway.

The existing top level of the causeway will be reduced to avoid obstruction to flow in flood periods.

The approximate cost of repairs for the existing causeway works out to Rs. 85,000.

அந்தக் கோவிலுக்குப் போகிற இடத்திலுள்ள காஸ்வேயை புதுப்பிக்க திட்டம் இருக்கிறது. இன்னொரு பால வேலையும் இருக்கிறது. அது உடனடியாகத் துவக்கப்படும் என்று நம்புகிறேன். ஆறு மாத காலத்திற்குள்ளாக முடியும் என்று நம்புகிறேன்.

வழுக்குப்பாறை, வரட்டுப்பள்ளத்தில் அணைகள்

*272 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள வழுக்குப்பாறை, வரட்டுப்பள்ளம் அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

(இ) வழுக்குப்பாறை அணைத் திட்டம் ரூபாய் 50 லட்சம், வரட்டுப் பள்ளம் அணை திட்டம் ரூபாய் 60 லட்சம்.

திரு. ஏ. எம். இராஜா : இந்த வழுக்குப்பாறை வரட்டுப்பள்ளம் திட்டம் வந்தால் பவானி வட்டத்தில் பெரும் பகுதிகள், வறட்சிப் பகுதியாக இருக்கிற அந்தப் பகுதிகள் நல்லமுறையில் பயனடைய முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக செயல்படுத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வழுக்குப்பாறைத் திட்டத்தில் சுமார் 200 ஏக்கர் வனத்துறை நிலங்கள் நீர்பிடிப்பால் பாதிக்கப்படுவதால் வன இலாகா ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஒப்புதல் கிடைத்தவுடன் இத் திட்டம் பற்றிய அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்பிக்கவேண்டுமென்று தலைமைப் பொறியாளர் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மதிப்பீடு பற்றி வருவாய்த் துறை வாரியம், வனத்துறை தலைவர் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் வேலையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படும்.

Intensive Banana Plantation in Dharmapuri District

* 273 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have any scheme to start Intensive Banana Plantation in Dharmapuri District; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rental flats in Government Estate

* 274 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Secretariat staff have requested the Government about the 22nd August-September 1970 for the construction of rental flats in the Government Estate, Mount Road, Madras; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) அரசு எஸ்டேட்டில் உள்ள வெற்று நிலம் அரசின் காரியங்களுக்காகத் தேவைப்படுவதால் அதைச் சங்கத்துக்கு அளிக்க இயலாது. எனவே சங்கத்தின் வேண்டுகோள் தள்ளுபடி செய்யப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்